டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண்
ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 12.09.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 072- Madurai | Online Edition

# பக்கிரா ஏரியிலிருந்து கிடைக்கும் வண்டல் மண், மத்திய கங்கைச் சமவெளியின் நீர் வள மேலாண்மைக்கு உதவும்

புது தில்லி, செப்.11

சந்த் கபீர் நகரில் உள்ள பக்கீரா ஏரிக்குக் கீழே உள்ள வண்டல்களில் 25,000 ஆண்டுகளாகக் குவிந்துள்ள காந்தத் தாதுக்களை அளவிட்ட ஒரு புதிய ஆய்வு, கடந்த கால பருவ-நிலை மாற்றங்களையும், அவை வட இந்தியாவில் மழைப் பொழிவு, வானிலைச் சிதைவு, வண்டல் போக்குவரத்து, ஏரி செயல்முறைகள் ஆகியவற்றை எவ்வாறு பாதித்துள்ளன என்பதையும் கண்டறிய உதவியுள்ளது.

இது, எதிர்காலப் பருவமழையின் போக்கைக் கணிக்க மேம்பட்ட பருவநிலை மாதிரிகளுக்கு வழிவகுப்பதோடு, பக்கிரா ஏரி ஒரு அங்கமாக உள்ள மத்திய கங்கைச் சமவெளியில் சிறந்த நீர் வள மேலாண்மைக்கும் உதவக்கூடும்.

மத்திய கங்கைச் சமவெளி, கோடை பருவமழையால் பாதிக்கப் படும் மிக முக்கியமான பிராந்தியங்களில் ஒன்றாகும். மேலும் இது விவசாய நடைமுறைகளின் அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்தது.

அறிவியல், தொழில்நுட்பத் துறையின் ஒரு தன்னாட்சி நிறுவனமான பிர் பல் சாஹ்னி தொல்லுயிரியல் நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், பக்கீரா ஏரியின் வண்டல்களை ஆராய்ந் தனர். அதன் அடிப்படையில் இந்த தகவல்கள் கிடைத்தன.

பருவநிலை மாதிரிகளை மேம்படுத்துவதற்கும், எதிர்காலப் பருவமழையின் போக்கைக் கணிப்பதற்கும், மாறிவரும் மழைப் பொழிவு முறைகளுக்கு ஏற்ப ஆறு, ஏரி அமைப்புகள் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதைப் புரிந்து கொள்வதற்கும் இந்த ஆய்வுத் தகவல்கள் மதிப்புமிக்க அடிப்படைத் தகவல்களை வழங்குகின்றன.

# ஒலக்கூர் வட்டாரத்தில் பயறு வகைப் பயிர்களில் தன்னிறைவு குறித்து விவசாயிகள் பயிற்சி




விழுப்புரம், செப்.11

விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் வட்டாரம், மாம்பாக்கம் கிராமத்தில் ஆத்மா திட்டத்தின் கீழ் பயறு வகைப் பயிர்களில் தன்னிறைவு என்ற தலைப்பில் விவசாயிகளுக்கான பயிற்சி நடைபெற்றது.

ஒலக்கூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஆரோக்கிய ராஜ் வழிகாட்டுதலின்படி நடைபெற்ற இப்பயிற்சியில், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சிவசண்முகம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பயிற்சியில் திண்டிவனம் எண்ணெய்வித்து ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் முனைவர் ஆனந்தி கலந்து கொண்டு, பயறு வகைப் பயிர்களில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். பருவத்திற்கு ஏற்ற உயர் விளைச்சல் ரகங்களைத் தேர்வு செய்தல், விதை நேர்த்தி செய்தல், உயிர் உரங்களின் முக்கியத்துவம் மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து எடுத்துரைத்தார். மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் Pulse Wonder பயிர் ஊக்கியை பரிந்துரைக்கப்பட்ட முறையில் தெளிப்பதன் மூலம் பூ உதிர்வைக் குறைத்து, காய் பிடிப்பை மேம்படுத்தி நல்ல மகசூல் பெற உதவும் என்றும் விவசாயிகளுக்கு விளக்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை வேளாண்மை அலுவலர் சின்னதுரை கலந்து கொண்டு, வேளாண்மைத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் இடுபொருட்கள் மற்றும் பல்வேறு மானியத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார்.

நிகழ்ச்சியின் நிறைவில் உதவி தொழில்நுட்ப மேலாளர் சிட்டிபாபு நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் வீராசாமி செய்திருந்தார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# இலாபம் தரும் கோழி வளர்ப்பு பயிற்சி

திருச்சி, செப்.11

திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள், விழிப்புணர்வு நிகழ்வுகள் மற்றும் செயல்விளக்கங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இளைஞர்களை தொழில்முனைவோராக மாற்ற கோழி வளர்ப்பு பற்றிய ஒரு நாள் நிலையப் பயிற்சி 16.09.26 (புதன்கிழமை) அன்று சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற உள்ளது.

இப்பயிற்சியில் விவசாயிகளின் இலாபத்தை அதிகரிக்க உதவும் புறக்கடை கோழி வளர்ப்பு, கோழி இனங்கள், கொட்டகை அமைத்தல், கோழி தீவனங்கள், கோழிக் குஞ்சு பராமரிப்பு, கோழிப் பண்ணை மேலாண்மை, நோய் பராமரிப்பு, இறைச்சி கோழி மற்றும் முட்டையிடும் கோழி வளர்ப்பு போன்ற தலைப்புகளின் கீழ் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இப்பயிற்சியில் கால்நடை உதவி மருத்துவர் ஹரீஷ், விளக்கவுரை வழங்க உள்ளார்.

எனவே ஆர்வமுள்ள விவசாயிகள் முன்பதிவு செய்து கலந்து கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம். பங்கு பெற விரும்பும் விவசாயிகள் 9942 449786, 85088 35287, 8838126730 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரிவித்தார்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**37. பெப்பர் சூப்**

**தேவையான பொருட்கள்**

மிளகு — 2 டீஸ்பூன்

பூண்டு — 5 பல்

சீரகம் — 1 டீஸ்பூன்

நெய் — 1 டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

மிளகு, சீரகத்தை பொடித்து நெய்யில் தாளித்து தண்ணீர் சேர்த்து 10 நிமிடம் கொதிக்கவிடவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# கேரட் நூற்புழு மேலாண்மை

## தாவர அடிப்படையிலான உயிரியல் நூற்புழுக்கொல்லி உருவாக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் லிங்கா கெமிக்கல்ஸ் நிறுவனம் ஒப்பந்தம்



கோயம்புத்தூர், செப்.11

நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பயிர் பாதுகாப்பை ஊக்குவிக்கும் முக்கிய முயற்சியாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரையைச் சேர்ந்த லிங்கா கெமிக்கல்ஸ் நிறுவனம் இணைந்து, கேரட் பயிரில் வேர் முடிச்சு நூற் புழுக்களை மேலாண்மை செய்வதற்கான தாவர அடிப்படையி லான உயிரியல் நூற்புழுக்கொல்லி உருவாக்கி மதிப்பீடு செய் வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

இத்தொழில்துறை கல்வியியல் கூட்டாண்மையின் மூலம், தாவர அத்தியாவசிய எண்ணெயை அடிப்படையாகக் கொண்ட நுண்குழம்பு உயிரியல் நூற்புழுக் கொல்லி உருவாக்கி, நூற்புழு மேலாண்மைக்கான சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுத் தொழில் நுட்பமாக மதிப்பீடு செய்யப்பட உள்ளது. கேரட் சாகுபடியில் நிலவும் முக்கிய உற்பத்தித் தடையை எதிர்கொண்டு, விவசாயி களுக்கு குறைந்த செலவில் பயனளிக்கும் தீர்வை உருவாக் குவதே இம்முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.


இந்த ஒப்பந்தம், வேளாண் பல்கலைக்கழக பதிவாளர் (பொறுப்பு) மற்றும் துணைவேந்தர் (பொறுப்பு) முனைவர் M.ரவீந்திரன், பயிர் பாதுகாப்பு மைய இயக்குநர் முனைவர் M.சாந்தி, மற்றும் தாவர நூற்புழுவியல் துறை பேராசிரியர் முனைவர் ய.அனிதா ஆகியோர் முன்னிலையில் கையெழுத் தானது. லிங்கா கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் சார்பில் நிறுவன உரிமையாளர் P.மகாலிங்கம் மற்றும் ஆலோசகர் B.முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், கேரட் பயிரைத் தாக்கும் வேர்–முடிச்சு நூற்புழுக்களுக்கு எதிரான, தாவர அடிப்படையிலான நூற்புழு கட்டுப்பாட்டு உயிரிப் பொருளின் உருவாக்கம் மற்றும் உயிரி–செயல்திறன் மதிப்பீடு என்ற திட்டத்தை செயல்படுத்துவதற்காக லிங்கா கெமிக்கல்ஸ் நிறுவனம் ரூ.6,92,070/- நிதியுதவி வழங்கியுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர நூற்புழுவியல் துறை பேராசிரியர் முனைவர் N.சீனிவாசன், முதன்மை ஆய்வாளராகவும், முனைவர் S.பிரபு, இணைப் பேராசிரியர், தாவர நூற்புழுவியல் துறை மற்றும் முனைவர் சத்யா மூர்த்தி பொன், உதவிப் பேராசிரியர், இயற்பியல் துறை ஆகியோர் இணை ஆய்வாளர் களாகவும் செயல்படுத்தப்பட உள்ளது. முனைவர் K.தேவராஜன், நூற்புழுவியல் துறை பேராசிரியர்மற்றும் தலைவர் இத்திட்டத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்கிப்பார்.

கேரட் பயிரில் வேர் முடிச்சு நூற்புழுக்கள் வேர்களில் உருமாற்றத்தை ஏற்படுத்தி, பயிரின் மகசூல் மற்றும் தரத்தைப் பாதிக்கின்றன. மேலும், நூற்புழுக்களால் பாதிக்கப்பட்ட வேர்களில் கரோட்டினாய்டு குறைவதுடன், இரண்டாம் நிலை நோய்த்தொற்றுகளுக்கு அதிக வாய்ப்பும் ஏற்படுகிறது. இதனால் கேரட் விளைபொருளின் சந்தை மதிப்பும் பாதிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டாண்மை, வேளாண் பல்கலைக்கழக அறிவியல் மற்றும் ஆராய்ச்சி திறனையும், லிங்கா கெமிக்கல்ஸ் நிறுவனத் தின் தொழில்துறை திறனையும் ஒருங்கிணைத்து, நடை முறைக்கு ஏற்ற தாவர அடிப்படையிலான நூற்புழு மேலாண்மை தொழில்நுட்பத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. உருவாக்கப்படவுள்ள உயிரியல் நூற்புழுக் கொல்லி, கேரட் சாகுபடியில் வேர் முடிச்சு நூற்புழுக்களை மேலாண்மை செய்வதற்கான குறைந்த செலவிலான, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் விவசாயிகளுக்கு பயனளிக்கும் அணுகுமுறையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முயற்சி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிகளை தொழில்துறை பயன்பாட்டிற்கான வேளாண் தொழில்நுட்பங்களாக மாற்றுவதற்கும், விவசாயிகள் எதிர் கொள்ளும் புதிய பயிர் பாதுகாப்புச் சவால்களுக்கு தீர்வு காண்பதற்கான பல்கலைக்கழகம் தொழில்துறை கூட்டாண் மையை வலுப்படுத்துவதற்கும் ஒரு முக்கியமான முன்னெடுப் பாக அமைகிறது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நுண்கீரை உற்பத்தி மற்றும் மதிப்புக்கூட்டி சந்தைப்படுத்துதல் பற்றிய பயிற்சி



கோயம்புத்தூர், செப்.11

கோவை மாவட்ட வேளாண் அறிவியல் நிலையமும் டாக்டர் என் ஜி பி கலை மற்றும் அறிவியல் கல்லூரி கோயம்புத்தூர் இணைந்து ஊட்டச்சத்து மாதத்தை கொண்டாடும் விதமாக ஒரு நாள் நிலைய பயிற்சியாக நுண்கீரை உற்பத்தி, மதிப்புக்கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் பற்றிய பயிற்சியை 11.09.26 அன்று இணைந்து நடத்தினர்.

இந்த நிகழ்வில் தொழில் முனைவோர், பண்ணை மகளிர், கிராமப்புற இளைஞர்கள், வேளாண் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் பொறுப்பு கோமதி, கலந்து கொண்டு நுண் கீரை உற்பத்தியில் முக்கியத்துவம் மற்றும் ஊட்டச் சத்துகளின் பயன்பாடு பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இதனைத் தொடர்ந்து என் ஜி பி கலை மற்றும் அறிவியல் கல்லூரி கோயம்புத்தூரைச் சார்ந்த ஸ்ரீதேவி, உணவு ஊட்டச்சத்துறை தலைவர், நுண்கீரை உற்பத்திக்கான வளர் ஊடகம், விதைகள் வளர்ப்பதற்கான தொழில் நுட்பங்கள் பற்றி விளக்கம் அளித்தார்.

அடுத்ததாக ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டு நுண்கீரை உற்பத்தி பற்றிய செயல் விளக்கங்கள் செய்து காண்பித்தனர் மற்றும் இவற்றுக்கான சந்தை வாய்ப்புகள் பற்றியும் இவற்றில் இருந்து தயாரிக்கப்படும் மதிப்பு கூட்டப்படும் பொருட்கள் பற்றியும் தெளிவாக கலந்துரையாடினர். இந்த நிகழ்வில் பங்கேற்பாளர்களின் சந்தேகங்களுக்கு தெளிவான விளக்கமும் அளித்தனர்.

இந்த நிலையை பயிற்சியில் நமது வேளாண் அறிவியல் நிலையத்தில் தொழில்நுட்ப வல்லுனர் சுரேஷ் குமார் எல் நினோ பாதிப்பை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இறுதியாக சம்பத் குமார் முன்னோடி விவசாயி இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியுரை வழங்கினார்.

# மண் வள மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான பயிற்சி




மதுரை, செப்.11

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் நீரேத்தான் கிராமத்தில் மண்வள மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான பயிற்சி நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குநர் ராணி, கலந்து கொண்டு மண் மாதிரி சேகரித்து அதனை பரிசோதனை செய்து அதற்கு ஏற்றவாறு பயிர் சாகுபடி செய்வதன் பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றி விளக்கினார். வேளாண்மை உதவி இயக்குநர் பாண்டி, பேசுகையில் வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார்.

மண் பரிசோதனை நிலையத்திலிருந்து ஜோஸ்பின் நிர்மலா, கலந்து கொண்டு மண் ஆய்வுக்கு மாதிரி எடுப்பது எப்படி என்று வயலில் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. மண் ஆய்வு ஏன் செய்ய வேண்டும் என்பதை பற்றியும் தெளிவாக கூறினார். வேளாண்மை அலுவலர் டார்வின் கலந்து கொண்டு வாடிப்பட்டி வட்டார வேளாண் கிடங்கில் விதைகள், நுண் சத்துக்கள் மற்றும் உயிர் உரங்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது பற்றி எடுத்துக் கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் இந்திரஜித் விவசாயிகளின் தனித்துவ அட்டை எண் பதிவு அதன் முக்கியதுவம் பற்றி விளக்கினார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் பிரியா நன்றி கூறினார்.

இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் பூமிநாதன் மற்றும் அருணாதேவி ஏற்பாடுகள் செய்திருந்தனர்.

# பயறு வகைகளில் தொகுப்பு முதல்நிலை செயல் விளக்க விழா




புதுக்கோட்டை, செப்.11

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் (ICAR) புது தில்லியின் கீழ் புதுக்கோட்டை மாவட்டம், வம்பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் நிலையத்தில் பயறு வகை பயிர்களில் தொகுப்பு முதல்நிலை செயல் விளக்க விழா 11.09.26 வெள்ளிக் கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவினை வேளாண் அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ம.தமிழ்ச் செல்வன், துவக்கி வைத்து பயறுவகை பயிர்களின் முக்கியத் துவம் மற்றும் பயறு வகைகளில் செயல்படுத்தப்படும் தொகுப்பு முதல் நிலை செயலாக்க திட்டம் (CFLD) பற்றிய விவரங்களை விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

க.பி.செந்தில்குமார் (உழவியல்), பயறு வகை பயிர்களில் ஆரம்பகால மேலாண்மை முறைகளான நிலம் தயாரித்தல், விதைத்தல், களை மேலாண்மை, நீர் மற்றும் உர மேலாண்மை பற்றி விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார். முனைவர் இரா.ராம்ஜெகதீஷ் (தாவர நோயியல்) பயறு வகை பயிர்களில் விதை நேர்த்தியின் முக்கியத்துவத்தையும் அது எவ்வாறு ஆரம்ப கால பூச்சி, நோய் தாக்குதலில் இருந்து பயிரை பாதுகாக்கிறது என்பதை பற்றி விவசாயிகளுடன் கலந்துரையாடினார். இந்த விழாவில் 50 விவசாயிகள் கலந்து கொண்டனர். அனைத்து விவசாயிகளுக்கும் வேளாண் இடுபொருளான உளுந்து விதைகள் வழங்கப்பட்டது.


மேலும் இந்த விழா ஏற்பாடுகளை பி.கருப்பசாமி, திட்ட உதவியாளர் (தொழில்நுட்பம்) மற்றும் தே.அமுல்ராஜ், திட்ட உதவியாளர் (கணினி) சிறப்பாக செய்திருந்தனர்.

# விளைச்சலுக்கு உத்தரவாதம் தரும் ‘ஸ்மார்ட் விதைகள்‘ (SMART SEED)

பொதுவாக நம்முடைய அன்றாட வாழ்க்கையில், ஸ்மார்ட் போன், ஸ்மார்ட் கிளாஸ் போன்ற வார்த்தைகளை நம்மில் பலருக்கு தெரிந்து, கேள்விபட்டு இருப்போம் அந்த நிலையில் தான் தற்போது புதியதாக அறிமுக மாறியுள்ள (SMART SEEDS) விதைகள் இந்திய வேளாண் உலகில் பரவலாக கவனம் பெறத் தொடங்கியுள்ளது.




## அது என்ன ஸ்மார்ட் விதைகள்?




விளைச்சலுக்கு ஆதாரமே விதைகள் தான். அப்படிபட்ட விதைகள் இயற்கை இடர்பாடுகள் மற்றும் பூச்சி/நோய் தாக்கு தலை திறம்பட எதிர் கொள்ளும் ஆற்றலை தான் இந்த ஸ்மாட் விதைகளில் கிடைத்திட விளைச்சலில் உத்தர வாதம் உறுதி (GUANANTEE) தரும் வகையில் தெலுங்கானா மாநிலத்தில் உள்ள ஹைதராபாத்தில் உள்ள இந்திய எண்ணெய் வித்து ஆராய்ச்சி நிறுவனம் (BIO POLYMER SMART SEED COATING TECHNOLOGY) கடந்த ஜுன் 2026-ல் (IIOR) அறிமுகம் செய்யப்பட்டது. (நம்முடைய TNAU விதை அமிர்தம் போல) இது தொடர்பான தகவல்களை மத்திய வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சம் வெளியிட்டுள்ளது.

## அது என்ன? எப்படி?

இந்த தொழில்நுட்பம் மட்கும் தன்மை கொண்ட இயற்கை பசை போன்ற திரவத்தால், விதையின் மேல் ஒரு பாதுகாப்பு அடுக்கு போன்றே பூசப்படுகிறது. இந்த அடுக்குகள் பயிரின் நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் ஊட்ட சத்துகள் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை கலந்த கலவை தான் ஸ்மார்ட் விதை களின் மேலே பூசப்பட்டு இருக்கும். இந்த விதைகள் நிலத்தில் விதைத்து முளைக்க தொடங்கும் போது வேர்பகுதிக்கு தேவை யான பாதுகாப்பையும், ஊட்டசத்தை நேரடியாக வழங்கும். இதனால் பயிர் நன்றாக வளரும் ஆரம்ப கட்டத்தில் பயிர்கள் வீரிய மாக வளர்வதோடு, சுற்றுப்புற சூழலியல் அழுத்தங்களை தாங்கும் சக்தியையும் பெறும் வகையில் ஸ்மாட் விதைகள் உள்ளன.

## பரிசோதனை (MULTY LOCATION TRIALS) சொல்லுவதென்ன?

பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட சோதனைகளின் அடிப் படையில் இந்த ஸ்மார்ட் விதைகள் மூலம் விதைக்கப்பட்ட நிலக் கடலை, சோயா பீன்ஸ் பயிரில் 30% வரை கூடுதலாக மகசூல் கிடைத்துள்ளதாக தரவுகள் உள்ளன. மேலும் வேர்கள் மண்ணில் ஆழமாகவும், உறுதியாகவும் ஊடுருவி நிலத்தடி நீரை உறிஞ்சி வளர்ச்சியை தூண்டி நல்ல மகசூலை தருகின்றன. இந்த தொழில் நுட்பத்தை தானியங்கள், பருப்பு வகை, எண்ணெய் வித்துகள்

மற்றும் காய்கறிகள் என அனைத்து விதமான பயிர்களுக்கு பயன்படுத்திட முடியும்.

விவசாயிகள் ஸ்மார்ட் விதைகளை பயன்படுத்துவதன் மூலமாக பயிர் இழப்பை குறைத்து அதிக லாபத்தை பெறலாம். குறிப்பாக, மழை ஏமாற்றத்தால் அதிக பாதிக்கப்படும் மானாவாரி விவசாயத் திற்கு இந்த தொழில்நுட்பம் நிரந்தர பாதுகாப்பையும் விளைச் சலுக்கு உத்திரவாதம் கொடுக்கும்.

ஸ்மார்ட் விதைகள் மானாவாரி விவசாயிகளை காக்கும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# பிளாஸ்டிக் தவிர்த்தல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு



ஈரோடு, செப்.11

ஈரோடு மாவட்டத்தில் கிராமப்புற வேளாண் அனுபவத் திட்டத்தின் கீழ் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழக மாணவிகள் லேகாஶ்ரீ, திரிஷ்தா, நிஷா பார்ஜோ, ஆனந்தி, நதியா மற்றும் கவி வர்ஷினி ஆகியோர் சென்னிமலை தொடக்கப் பள்ளியில் மாணவர்களிடையே பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்த்தல் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைத்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்த்து, துணிப்பை மற்றும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கலாம் என மாணவிகள் விளக்கினர்.

மேலும், வீட்டிலுள்ள குறைந்த இடத்தைப் பயன்படுத்தி காய்கறிகள் மற்றும் கீரைகளை வளர்ப்பதன் மூலம் சத்தான உணவைப் பெறுவதுடன் இயற்கை வளங்களைப் பாதுகாத்து சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறையைப் பின்பற்ற முடியும் என பள்ளி மாணவர்களுக்கு எடுத்துரைத்தனர்.

# மொடக்குறிச்சி வட்டாரத்தில் பயிர் பல்வகைப்படுத்துதல் குறித்த விவசாயிகள் பயிற்சி




ஈரோடு, செப்.11

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் அட்மா திட்டத்தின் கீழ் மொடக்குறிச்சி கிராமத்தில் உள் மாவட்ட அளவில் பயிர் பல்வகைப்படுத்துதல் (Crop Diversification) என்ற தலைப்பில் 40 விவசாயிகளுக்கு 11.09.26 அன்று பயிற்சி அளிக்கப்பட்டது.

க.பிரசாத், வேளாண்மை உதவி இயக்குநர், மொடக்குறிச்சி, தலைமை தாங்கி பசுந்தாள் பயிர்களின் மூலம் மண்வளத்தை மேம்படுத்துதல் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைத்து அங்கக உரங்களை பயன்படுத்துதல், மேலும் உயிர் உரங்களின் பயன்கள் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்.

அரசப்பன், துணை வேளாண்மை இயக்குநர் (ஓய்வு), பயிர் சுழற்சி, ஊடுபயிர், கலப்பு விவசாயம், அதிக மதிப்புள்ள பயிர்கள், பயிர் பல்வகைப்படுத்துதலின் நன்மைகளான மேம் பட்ட வருமானம், மண் ஆரோக்கியம், காலநிலை தாங்குதிறன் மற்றும் வளம் பாதுகாப்பு போன்றவைகளை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

காவியா, வேளாண்மை அலுவலர், மொடக்குறிச்சி, வேளாண்மைத் துறை மானியத் திட்டங்கள், நுண்ணீர் பாசனம் மற்றும் விவசாய அடையாள எண் பதிவு செய்தல் குறித்து விளக்கினார்.

அ.பிரதீப்குமார், வட்டார தொழில்நுட்ப மேலாளர், மொடக்குறிச்சி, அட்மா திட்டங்கள், உழவன் செயலி மற்றும் இ-நாம் குறித்தும் பதிவு செய்யும் முறைகள் பற்றி கூறினார். பொ.லட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர் இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# உயிர் எரிவாயு கலன் – விழிப்புணர்வு நிகழ்ச்சி



தேனி, செப்.11

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில் B.Sc. (Hons.) வேளாண்மை இறுதி ஆண்டு பயிலும் மாணவர்களான பா.ரோகன், க.கோகுல் சதுர்வேதி, மூ.குணால், பா.ரோஹித் ராஜ், கை.ந.கவுரேஷ், பா.பத்மநாபஹரி மற்றும் சுதிர் ரெட்டி ஆகியோர், RAWE (Rural Agricultural Work Experience கிராமப்புற வேளாண் பணி அனுபவம்) திட்டத்தின் ஒரு பகுதியாக, தேனி மாவட்டம், சின்னமனூர் வட்டம், ஓடைப்பட்டி கிராமத்தில் உயிர் எரிவாயு கலன் பயன்பாடு மற்றும் அதன் பயன்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினோம்.

**உயிர் எரிவாயு கலன் என்றால் என்ன?**

கால்நடைகளின் சாணம், சமையலறைக் கழிவுகள் மற்றும் பிற மக்கும் கரிமக் கழிவுகளை ஆக்சிஜன் இல்லாத நிலையில் நுண்ணுயிரிகளால் சிதைவடையச் செய்வதன் மூலம் உயிர் எரிவாயு தயாரிக்கப்படும் அமைப்பே உயிர் எரிவாயு கலன் (Biogas Digester) ஆகும். இதில் முக்கியமாக மீத்தேன் மற்றும் கார்பன் டைஆக்சைடு அடங்கிய உயிர் எரிவாயு உருவாகிறது. மீத்தேன் எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

**தேவையான பொருட்கள்**

மாட்டுச் சாணம், தண்ணீர், சமையலறை மற்றும் வீட்டு மக்கும் கரிமக் கழிவுகள், உயிர் எரிவாயு கலன், கலவைத் தொட்டி (Mixing tank), வாயு சேகரிப்பு அமைப்பு / வாயுக் குழாய், எரிவாயு அடுப்பு, வெளியேற்றும் தொட்டி, குழாய்கள் மற்றும் இணைப்புப் பொருட்கள்.

**உயிர் எரிவாயு தயாரிக்கும் செயல்முறை**

கரிமக் கழிவுகள் + மாட்டுச் சாணம், தண்ணீருடன் கலந்து குழம்பாக்குதல், கலன்/செரிமானத் தொட்டியில் செலுத்துதல், ஆக்சிஜன் இல்லாத நிலையில் நுண்ணுயிர் சிதைவு, உயிர் எரிவாயு உருவாக்கம், வாயு சேகரிப்பு.

**சமையல் மற்றும் பிற பயன்பாடுகளுக்கு பயன்படுத்துதல்**

சாணம் மற்றும் தண்ணீர் தேவையான விகிதத்தில் கலந்து கலனில்

செலுத்தப்படுகிறது. கலனுக்குள் காற்றில்லாத சூழலில் நுண்ணுயிரிகள் கரிமப் பொருட்களைச் சிதைக்கின்றன. இதன் விளைவாக உயிர் எரிவாயு உருவாகி மேல்பகுதியில் சேகரிக்கப்படுகிறது. மீதமுள்ள செரிமானக் கழிவு உயிர் எரிவாயு கலன் கழிவுரமாக வெளியேறி நல்ல கரிம உரமாகப் பயன்படுத்தப்படுகிறது.

**பரிந்துரைகள்**

கலனில் மக்கும் கரிமக் கழிவுகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். தினசரி சாணம் மற்றும் தண்ணீர் கலவையை சீராக வழங்க வேண்டும். பிளாஸ்டிக், கண்ணாடி, உலோகம் போன்ற மக்காத பொருட்களை கலனில் போடக்கூடாது. வாயுக் குழாய்கள் மற்றும் இணைப்புகளில் கசிவு உள்ளதா என்பதை அவ்வப்போது பரிசோதிக்க வேண்டும். கலனைச் சுற்றியுள்ள பகுதியை சுத்த மாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க வேண்டும். வெளியேறும் செரிமானக் கழிவை வயல் வெளிகளில் கரிம உரமாக பயன்படுத்தலாம்.

**உயிர் எரிவாயுவின் பயன்பாடுகள்**

1. சமையலுக்கு எரிபொருளாகப் பயன்படுத்தலாம்.
2. மக்கும் வேளாண் மற்றும் கால்நடைக் கழிவுகளை பயனுள்ள வளமாக மாற்றலாம்.
3. மரவிறகு மற்றும் பிற எரிபொருட்களின் பயன்பாட்டைக் குறைக்க உதவும்.
4. கலனிலிருந்து கிடைக்கும் கழிவுரத்தை வயல்களில் கரிம உரமாகப் பயன்படுத்தலாம்.
5. வீட்டுச்சுற்றுப்புறத்தில் கழிவு மேலாண்மையை மேம்படுத்தலாம்.
6. புதுப்பிக்கத்தக்க மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற ஆற்றல் வளமாக பயன்படுகிறது.

**விழிப்புணர்வு நிகழ்ச்சியின் பயன்**

இந்த நிகழ்ச்சியின் மூலம் ஓடைப்பட்டி கிராம விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு கால்நடைச் சாணம் மற்றும் வீட்டு மக்கும் கழிவுகளை வீணாக்காமல் உயிர் எரிவாயு தயாரிப்பில் பயன் படுத்துவது குறித்து விளக்கப்பட்டது. உயிர் எரிவாயு கலனின் அமைப்பு, செயல்படும் விதம், தேவையான மூலப்பொருட்கள், தயாரிப்பு முறை, பாதுகாப்பு மற்றும் அதன் மூலம் கிடைக்கும் கரிம உரத்தின் பயன்கள் குறித்து மாணவர்கள் விளக்கமளித்தனர். இதன் மூலம் கழிவை வளமாக மாற்றுதல், எரிபொருள் செலவைக் குறைத்தல் மற்றும் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் பற்றிய விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்தப்பட்டது.

கழிவுகளை வீணாக்காமல், வளமாக மாற்றுவோம்! உயிர் எரிவாயு மூலம் நிலையான வேளாண்மையை உருவாக்குவோம்!

# மண்வள மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி

மதுரை, செப்.11

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் இராஜாக்கள் பட்டி கிராமத்தில் மண்வள மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 11.09.26ம் தேதி அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியில் சுமார் 40 முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன், மண்வள மேலாண்மை பயன்பாடுகள் அதன் அவசியங்கள் மற்றும் மத்திய மாநில திட்டங்கள், வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்களின் மானிய விவரங்கள், தக்கைப்பூண்டு விதைகள் 50 சத மானியம் மற்றும் விவசாயிகளின் தனித்துவ அடையாள எண் (குயசஅநச சுநபளைவசல), பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம் குறித்து பேசி அனைவரையும் வரவேற்றார்.

மேலும் ஓய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் குணசேகரன் கூறியதாவது, மண்வள மேலாண்மையின் தொழில்நுட்பங் களான வயலில் மண் மாதிரிகள் சேகரித்தல், மண் பரிசோதனை செய்தல், மண் பரிசோதனை முக்கியத்துவம், மண்ணின் அமில காரத்தன்மை முறைகள், மண் வளம் மேம்பாடு, சமச்சீர் உர மேலாண்மை, உயிர் உரங்களின் பயன்பாடுகள், பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்களின் பயன்பாடுகள், மண்ணின் வளத்தையும் அதில் உள்ள சத்துக்களையும் மேம்படுத்து வதற்கும் உரச்செலவைக் குறைத்து அதிக மகசூல் பெறுவதற்கும் அதிக உரம் மற்றும் பூச்சி மருந்துகள் தெளிப்பதால் காற்று மாசுபடுவதைக் தவிர்ப்பதற்கும் மண் பரிசோதனை செய்தல் மிகவும் குறித்த தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

மேலும் இயற்கை பூச்சி விரட்டிகளான இஞ்சி பூண்டு கரைசல், விளக்கு பொறி, இன கவர்ச்சி பொறி, மீன் அமினோ அமிலம், இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ்பைரில்லம்

பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம் மண்புழு உரம் பயன் பாடுகள் ஆகியவற்றின் மூலம் மண்வளத்தை பெருக்கி அதிக மகசூல் பெறலாம் என தொழில்நுட்பக் கருத்துக்களை விவசாயி களுக்கு தெளிவாக எடுத்துரைத்தார்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் அட்மா திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூறினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சௌந்தராஜன், வசந்தி செய்து இருந்தனர்.



# கண்டமங்கலம் வட்டாரம் கொடுக்கூர் கிராமத்தில் அட்மா திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயிற்சி




விழுப்புரம், செப்.11

விழுப்புரம் மாவட்டம், கண்டமங்கலம் ஒன்றியம், கொடுக்கூர் கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் Dr. பாலசுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி வேளாண்மை துறையில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டம் மூலம் நெற்பயிரில் சூழலியல் சார்ந்த பயிர் பகுப்பாய்வு (AESA IN PADDY) பயிற்சி நடத்தப்பட்டது.

இப்பயிற்சிக்கு வேளாண்மை அலுவலர் விஜய் தலைமை தாங்கினார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் தேன்மொழி வரவேற்புரை அளித்தார்.

திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுனர் முனைவர் செந்தமிழ், நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் தங்கள் வயல் சூழலை (பயிர் வளர்ச்சி, வானிலை, பூச்சிகள் மற்றும் இயற்கை எதிரிகள்) வாரந்தோறும் உற்று நோக்கி பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தாமல் நன்மை செய்யும் பூச்சிகளைக் கொண்டே பூச்சிகளை கட்டுப்படுத்தும் சுய முடிவெடுக்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். கண்மூடித்தனமாக ரசாயன பூச்சிகளை உபயோகத்தை தவிர்க்க வேண்டும். தொடர்ந்து பூச்சிக்கொல்லிகளை உபயோகிப்பதால் வயலில் இயற்கையாக வாழும் ஊசி தட்டான், பொறி வண்டு, சிலந்திகள் போன்ற இயற்கை எதிரி பூச்சிகள் முற்றிலுமாக அழிக்கப்படுகிறது. இயற்கை முறையில் பூச்சிகளை கட்டுப் படுத்த வர வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தார்.

உதவி வேளாண்மை அலுவலர் சுதா, வேளாண் திட்டப் பணிகள் வேளாண் மானியங்கள் பற்றியும் சிறு/குறு விவசாயிகள் 100% மானியத்தில் தெளிப்பு நீர் மற்றும் சொட்டு நீர் பாசனம் அமைத்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொண்டார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர் வீரமணி நன்றி கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் அருள் பாபு செய்திருந்தார்.

# கறவை மாடுகளில் மூலிகை பால் பெருக்கி மற்றும் ஊட்டச்சத்துகளை பயன்படுத்துதல் குறித்த செயல் விளக்கம்



புதுக்கோட்டை, செப்.11

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் (TNAU) மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் (ICAR) புது தில்லியின் கீழ் புதுக் குகோட்டை மாவட்டம், வம்பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் நிலையத்தில் கறவை மாடுகளில் மூலிகை பால் பெருக்கிகளை மற்றும் ஊட்டச்சத்துகள் குறித்த செயல் விளக்கத்திற்கான இடுபொருள் விநியோகம் 10.09.26 வியாழக்கிழமை அன்று வழங்கப்பட்டது. இதில் வேளாண் அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ம.தமிழ்ச்செல்வன், கறவை மாடுகளில் பால் பெருக்கி களை பயன்படுத்துவதின் முக்கியத்துவத்தை பற்றி கூறினார்.

முனைவர் வ.பா. இராகவேந்திரன் (கால்நடை அறிவியல்) கறவை மாடுகளில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான மூலிகை சேர்க்கைகள் வழங்குவதன் அவசியம் குறித்தும். பால் உற்பத்தி மற்றும் சுரப்பை அதிகரிப்பதில் ஊட்டச்சத்து மற்றும் துணை ஊட்டச்சத்து வழங்குவதன் அவசியம் மற்றும் TNAUVAS -PAM 21-ன் நன்மைகள் குறித்து விரிவாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். இந்த செயல் விளக்க நிகழ்ச்சியில் 20 க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இதில் விவசாயி களுக்கு பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மூலிகை சேர்க் கைகள், ஊட்டச்சத்து மற்றும் துணை ஊட்டச்சத்துகள் வழங்கப் பட்டது. இந்த ஏற்பாடுகளை பி.கருப்பசாமி, திட்ட உதவியாளர் (தொழில்நுட்பம்) சிறப்பாக செய்திருந்தார்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# இளைஞர்களை ஈர்க்கும் நவீன வேளாண்மை

# தொழில்நுட்பமும் தொழில்முனைவும் இணையும் புதிய தலைமுறை விவசாயம்

'உழவுத் தொழில் உலகின் முதன்மைத் தொழில்' என்று தமிழர் பண்பாடு பெருமையாகக் கூறுகிறது. ஆனால் கடந்த சில தசாப்தங்களில், வேளாண்மை என்பது கடின உழைப்பும், குறைந்த வருமானமும் கொண்ட தொழிலாக மட்டுமே பல இளைஞர்களால் கருதப்பட்டது. இதன் விளைவாக, கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு வேலை தேடி செல்லும் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. இதனால், விவசாயத்தில் ஈடுபடும் மக்களின் சராசரி வயதும் உயர்ந்து வருகிறது. ஆனால் இன்று நிலைமை வேகமாக மாறி வருகிறது. செயற்கை நுண்ணறிவு (AI), ட்ரோன் தொழில்நுட்பம், துல்லிய வேளாண்மை, உயிரித் தொழில்நுட்பம், இணைய வழி சந்தைப்படுத்தல், வேளாண் தொழில்முனைவு போன்ற புதுமைகள் வேளாண்மையை ஒரு அறிவியல் சார்ந்த, இலாபகரமான மற்றும் மதிப்புமிக்க தொழிலாக மாற்றியுள்ளன. இன்றைய வேளாண்மை என்பது வெறும் பயிர் சாகுபடி அல்ல; அது தொழில்நுட்பம், அறிவியல், தொழில்முனைவு மற்றும் சந்தை மேலாண்மை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வடிவமாக மாறியுள்ளது. இந்த மாற்றம் இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளின் கதவுகளைத் திறந்து வைத்துள்ளது.

### ஏன் இளைஞர்கள் வேளாண்மையை விட்டு விலகினர்?

கடந்த காலங்களில் பல காரணங்களால் இளைஞர்கள் வேளாண்மையில் ஆர்வம் இழந்தனர். அவை, நிலையான வருமானம் இல்லாமை, பருவமழையை மட்டுமே சார்ந்த சாகுபடி, நீர்ப்பற்றாக் குறை, அதிக உற்பத்திச் செலவு, சந்தை விலை ஏற்ற இறக்கம், கடின உடல் உழைப்பு, தொழில்நுட்ப பயன்பாடு குறைவு, சமூகத்தில் வேளாண்மைக்கு குறைந்த மதிப்பு, இந்த சவால்கள் பலரையும் வேறு துறைகளை நோக்கி நகர்த்தின.

### நவீன வேளாண்மை என்றால் என்ன?

நவீன வேளாண்மை என்பது அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் தரவு அடிப்படையில் மேற்கொள்ளப்படும் திறமையான விவசாய முறையாகும். இதில் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, அதிக மகசூல், உயர்தர விளைபொருள் மற்றும் அதிக இலாபம் பெறுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

## இளைஞர்களை ஈர்க்கும் நவீன வேளாண் தொழில்நுட்பங்கள்

### 1. செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence – AI)

AI தொழில்நுட்பம் இன்று வேளாண்மையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

AI மூலம், பயிர் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறியலாம். வானிலை முன்னறிவிப்பைப் பெறலாம். எப்போது பாசனம் செய்ய வேண்டும் என்பதை அறியலாம். உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாட்டை திட்டமிடலாம். மகசூலை முன் கணிக்கலாம். இது இளைஞர்களுக்கு தொழில்நுட்பம் சார்ந்த புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்குகிறது.

### 2. ட்ரோன் தொழில்நுட்பம்

இன்று ட்ரோன்கள் மூலம், பூச்சிக்கொல்லி தெளித்தல், உரத் தெளித்தல், விதை விதைத்தல், பயிர் ஆரோக்கியம் கண் காணித்தல், நில வரைபடம் தயாரித்தல், போன்ற பணிகளை குறைந்த நேரத்தில் செய்ய முடிகிறது. இதனால் தொழிலாளர் பற்றாக்குறை குறைவதுடன், செலவும் குறைகிறது.

### 3. துல்லிய வேளாண்மை (Precision Agriculture)

GPS, GIS, செயற்கைக்கோள் படங்கள், மண் ஈரப்பத உணரிகள் (Soil Moisture Sensors), IoT கருவிகள் ஆகியவற்றின் உதவியுடன், பயிருக்கு தேவையான அளவு நீர், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மட்டும் வழங்கப்படுகிறது. இதன் மூலம், உற்பத்திச் செலவு குறைகிறது. மகசூல் அதிகரிக்கிறது. இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுகின்றன.

### 4. மண்ணில்லா சாகுபடி (Hydroponics & Aeroponics)

நகர்ப்புறங்களில் கூட குறைந்த இடத்தில் காய்கறிகளை உற்பத்தி செய்ய இந்த தொழில்நுட்பங்கள் பயன்படுகின்றன.

**இதன் சிறப்புகள் :** குறைந்த நீர் பயன்பாடு, அதிக உற்பத்தி, ஆண்டு முழுவதும் சாகுபடி, பூச்சி மற்றும் நோய் தாக்குதல் குறைவு.

### 5. செங்குத்து விவசாயம் (Vertical Farming)

பல அடுக்குகளில் பயிர்களை வளர்க்கும் இந்த முறை, நகரங்களில் நிலப்பரப்பு குறைவாக இருக்கும் சூழலில் மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

### 6. ஸ்மார்ட் பாசன அமைப்புகள்

மண் ஈரப்பத உணரிகள் மற்றும் மொபைல் செயலிகள் மூலம் பாசனத்தை தானியங்கி முறையில் கட்டுப்படுத்தலாம்.

இதனால், நீர் சேமிக்கப்படுகிறது. மின்சாரச் செலவு குறைகிறது. பயிர் வளர்ச்சி மேம்படுகிறது.

வேளாண் தொழில்முனைவு – இளைஞர்களின் புதிய பாதை

இன்றைய இளைஞர்கள் வெறும் விவசாயிகளாக மட்டுமல்லாமல் Agripreneurs (வேளாண் தொழில்முனைவோர்) ஆகவும் உருவாகி வருகின்றனர்.

**அவர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகள்**

நர்சரி (Nursery) தொழில், காளான் உற்பத்தி, தேனீ வளர்ப்பு, மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரித்தல், இயற்கை உர உற்பத்தி, விதை உற்பத்தி, ட்ரோன் சேவை மையங்கள், மண் பரிசோதனை ஆய்வகங்கள், வேளாண் ஆலோசனை மையங்கள்.

**டிஜிட்டல் சந்தைப்படுத்தல் – விவசாயிக்கு நேரடி விற்பனை**

இணைய வழி சந்தைகள் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம், நேரடியாக நுகர்வோருக்கு விற்பனை செய்யலாம். இடைத் தரகர்களின் எண்ணிக்கை குறைகிறது. விவசாயிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கிறது. பிராண்டு உருவாக்க முடிகிறது.

**Start-up நிறுவனங்களின் பங்கு**

இந்தியாவில் பல வேளாண் தொடக்க நிறுவனங்கள் (Agri Start-ups)

AI அடிப்படையிலான ஆலோசனைகள், ட்ரோன் சேவைகள், ஆன்லைன் சந்தைகள், மண் மற்றும் பயிர் பகுப்பாய்வு, டிஜிட்டல் நிதிச் சேவைகள், போன்ற புதுமையான சேவைகளை வழங்கு கின்றன.

இவை இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளையும் உருவாக்கு கின்றன.

**அரசின் ஊக்குவிப்புகள்**

இளைஞர்களை வேளாண்மையில் ஈடுபடுத்த மத்திய மற்றும் மாநில அரசுகள் பல திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

**அவற்றில் சில,** வேளாண் உள்கட்டமைப்பு நிதி (Agriculture Infra-structure Fund), பிரதமர் கிசான் திட்டம், சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசன மானியம், FPO (Farmer Producer Organization) ஊக்குவிப்பு, Start-up India, Mudra கடன், வேளாண் பட்டதாரி களுக்கான தொழில்முனைவு திட்டங்கள்

### இளைஞர்கள் வளர்க்க வேண்டிய திறன்கள்

நவீன வேளாண்மையில் வெற்றி பெற இளைஞர்கள் பின்வரும் திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

டிஜிட்டல் அறிவு, வணிகத் திட்டமிடல், சந்தைப்படுத்தல் திறன், நிதி மேலாண்மை, தரவு பகுப்பாய்வு, தகவல் தொடர்புத் திறன், புதுமை சிந்தனை, சுற்றுச்சூழல் பொறுப்பு.

### எதிர்கால வேளாண்மை அறிவியல் சார்ந்த தொழில்

எதிர்காலத்தில் வேளாண்மை என்பது வெறும் உழவு அல்ல; அது,

தரவு அறிவியல் (Data Science), செயற்கை நுண்ணறிவு, உயிரித் தொழில்நுட்பம், ரோபோடிக்ஸ், செயற்கைக்கோள் தொழில்நுட்பம், தானியங்கி இயந்திரங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த துறையாக இருக்கும். இந்த மாற்றத்திற்கு ஏற்ப தங்களைத் தயார்படுத்திக் கொள்ளும் இளைஞர்களே நாளைய வெற்றிகரமான விவசாயிகளும் தொழில்முனைவோரும் ஆவார்கள்.

### இளைஞர்களுக்கான ஊக்கமளிக்கும் செய்தி

விவசாயம் என்பது இன்று ஒரு பாரம்பரியத் தொழில் மட்டுமல்ல; அறிவியல், தொழில்நுட்பம், தொழில்முனைவு மற்றும் சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றை இணைக்கும் ஒரு நவீன தொழிலாக மாறியுள்ளது. நிலத்தை நேசிக்கும் மனப்பான்மை, புதிய தொழில் நுட்பங்களை கற்றுக்கொள்ளும் ஆர்வம், சந்தை அறிவு மற்றும் புதுமையான சிந்தனை இருந்தால், வேளாண்மை இளைஞர்களுக்கு சிறந்த தொழில் வாய்ப்பாக அமையும்.

### முடிவுரை

இந்தியாவின் எதிர்கால உணவுப் பாதுகாப்பும், கிராமப்புற பொருளாதார வளர்ச்சியும், இளைஞர்களின் பங்களிப்பை பெரிதும் சார்ந்துள்ளது. அவர்களை வேளாண்மைக்கு ஈர்க்க வேண்டுமெனில், வேளாண்மையை அறிவியல் சார்ந்த, தொழில்நுட்பம் நிறைந்த, இலாபகரமான மற்றும் மதிப்புமிக்க தொழிலாக மாற்ற வேண்டும்.செயற்கை நுண்ணறிவு, ட்ரோன்கள், துல்லிய வேளாண்மை, மண்ணில்லா சாகுபடி, டிஜிட்டல் சந்தைப்படுத்தல், வேளாண் தொழில்முனைவு போன்ற புதுமைகள் இந்த மாற்றத்திற்கு வலுவான அடித்தளமாக உள்ளன.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

‘இன்றைய இளைஞன் தொழில்நுட்பத்துடன் இணைந்தால், நாளைய வேளாண்மை வளம்பெறும்; வேளாண்மை வளம் பெற்றால், இந்தியாவின் உணவுப் பாதுகாப்பும் பொருளாதாரமும் வலுப்பெறும்.“விவசாயம் என்பது கடந்த காலத்தின் பாரம்பரியம் மட்டுமல்ல; அது எதிர்கால தலைமுறையின் அறிவியல் சார்ந்த தொழிலும், தொழில்முனைவு வாய்ப்பும், நாட்டின் வளர்ச்சிக்கான அடித்தளமும் ஆகும்.‘

தகவல் : ***வெங்கடேஷ் ம, முதுநிலை உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா ரா, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி –621 104.***

